**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகள் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் மாணவ, மாணவியருக்கு (Days Scholar) மதிய உணவு வழங்குவது – ரூ.15,59,700/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.78** **நாள்: 02.12.2014**

**ஜய–கார்த்திகை 16, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 25.07.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.2193/சிபதி/2014, நாள் 01.08.2014.

----

**ஆணை:**

2014–15 ஆம் நிதியாண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரின் போது, சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பு செய்தார்கள்:–

**“மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ், 23 அரசு சிறப்புப் பள்ளிகளும், 54 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில், விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஒரு நபருக்கு 650 ரூபாய் வீதம் உணவூட்டுச் செலவினம் வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புப் பள்ளிகளில், தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் மாணவ, மாணவியருக்கு தற்போது மதிய உணவு வழங்கப்படுவதில்லை. எனவே, சத்துணவு திட்டம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின், கட்டுப்பாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், உத்தேசமாக 1733 மாணவ, மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 38 லட்சத்து 99 ஆயிரத்து 250 ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்’’.**

**2.** மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேற்காணும் முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகளில், தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் (Days Scholar), 1733 மாணவ, மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்க ஏதுவாக, ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு ரூ.7.50 வீதம் 10 மாதங்களுக்கு, ரூ.38,99,250/– நிதி ஒப்பளிப்பு வழங்கிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** மேற்படி சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் பரிந்துரையினை கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத்

**[த.பி.பா]**

திறனாளிகள் நலத் துறையின் கீழ் இயங்கும், 23 அரசு சிறப்புப் பள்ளிகள் மற்றும் 54 அரசு உதவிபெறும் சிறப்புப் பள்ளிகளில், தினசரி காலை வந்து மாலை வீடு திரும்பும் (Days Scholar), 1733 மாணவ, மாணவியர்களுக்கும், கீழ்க்கண்ட விவரப்படி, மதிய உணவு வழங்க ஏதுவாக, ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு ரூ.7.50 வீதம் இந்நிதியாண்டில் (2014–15), எஞ்சிய 4 மாதங்களுக்கு மட்டும் ரூ.15,59,700/–(ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து எழுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுககான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | | அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை | அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 45 | 263 |
| 2. | காதுகேளாதோர் | 143 | 817 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோர் | 40 | 310 |
| 4. | கை, கால் பாதிக்கப்பட்டோர் | 5 | 110 |
| | மொத்தம் | 233 | 1500 |

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| அ | <u>பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு பள்ளி</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02–சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AA பார்வையற்றோர் பள்ளி – 67– உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09 – ஏனையவை. (து.தொ.கு 2235-02-101-AA-6798) | ரூ.40,500/– |
| ஆ | <u>காது கேளாதோருக்கான அரசு சிறப்பு பள்ளி</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத்தினாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AR காதுகேளாதோர் பள்ளிகள் – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09–ஏனையவை. (து.தொ.கு 2235-02-101-AR–6794) | ரூ.1,28,700/– |
| இ | <u>மனவளர்ச்சி குன்றியோருக்கானஅரசு சிறப்புப் பள்ளி</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் – 102 குழந்தைகள் நலன் – I திட்டத்தில் சேராதது – AZ – மனவளர்ச்சி குன்றியோர் நல நிலையம் தொடங்குதல் – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் – 09–ஏனையவை. (து.தொ.கு 2235–02–102–AZ–6796) | ரூ.36,000/– |
| ஈ | <u>கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு பள்ளி</u><br>2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – BE கை கால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09 – ஏனையவை.<br>( து.தொ.கு 2235 -02-101-BE-6799) | ரூ.4,500/– |

[த.பி.பா]

| | | |
|---|---|---|
| உ | **<u>அங்கீகரிக்கப்பட்ட சிறப்புப் பள்ளிகள்</u>**<br>2235 – சமூகப் பாதுகாப்பு நலனும் –02– சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது – CE – மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு நிதி உதவி – 67 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் –09– ஏனையவை. (த.தொ.கு 2235 –02–101–CE–6798) | ரூ.13,50,000/– |
| | **மொத்தம்** | **ரூ.15,59,700/–** |

**5.** மேலே பத்தி **3**–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Insturment of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்ப்பார்த்து, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறும், மேலும், இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, **2015–16** ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அலுவல் சார்பற்ற எண்.**65723**/நிதி(சந)/**2014**, நாள் **01.12.2014**–ன்படி, கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.**1645**–ன் (ஆயிரத்து அறுநூற்று நாற்பத்து ஐந்து) கீழ் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78**.
மாநில கணக்காயர், சென்னை -**18**.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -**35**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை – 78 வழியாக)
**<u>நகல்:</u>**
முதலமைச்சரின் முதன்மைச் செயலர், சென்னை–**9**
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (சந (ம) சஉதி) அலுவலகம், சென்னை–**9**.
நிதித்(சந) துறை, சென்னை–**9**
நிதித் (வரவு செலவு பொது–I) / (வ.செ.பொ.II) / (மை ம ஆ பி) துறை, சென்னை–**9**
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–**9**.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.